

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.3.2025) முகாம் அலுவலகத்தில், ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள பெரியார் அம்பேத்கர் வாசகர் வட்ட விழாவில் கலந்து கொள்ள திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி மற்றும் வழக்கறிஞர் அருள்மொழி ஆகியோர் செல்வதையொட்டி வாழ்த்து தெரிவித்தார்.

### தொகுதி மறுசீரமைப்பு : தென் மாநிலங்களைச் சேர்ந்த

# எம்.பி.க்களைக் கொண்டு கூட்டு நடவடிக்கை குழு அமைப்பது வரவேற்கத்தக்கது!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, மார்ச் 7-

தொகுதி மறு சீரமைப்புக்கு எதிராக தென் மாநிலங்களைச் சேர்ந்த எம்.பி.க்களைக் கொண்டு கூட்டு நடவடிக்கை குழு அமைப்பது வரவேற்கத்தக்கது என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளது.

இது குறித்து 6.3.2025 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறி யிருப்பதாவது:L

2026 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, நாடாளுமன்ற, சட்டமன்ற தொகுதிகள் மறுசீரமைப்பு செய்யப்பட உள்ளதாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இதன்படி மக்கள் தொகை கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்நாடு உட்பட தென்னிந்திய மாநிலங்களில் எம்பி தொகுதிகள் குறைய வாய்ப்புள்ளது. இது தொகுதி மறுசீரமைப்பு பெயரில் தமிழகத்திற்கு இழைக்கப்படும் அநீதி என முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தார். மேலும், மார்ச் 5ம் தேதியன்று அனைத்துக் கட்சி கூட்டம் நடத்தப்படும். அரசியல் பாகுபாடின்றி மாநில நலனுக்காக இக்கூட்டத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டுமென தெரிவித்திருந்தார்.

இதன்படி, தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் அனைத்துக் கட்சி கூட்டம் நடந்தது. 58 கட்சிகள் சார்பில் முக்கிய தலைவர்கள் பங்கேற்றனர். எதிர்பார்த்ததுபோலவே பா.ஜ., த.மா.கா., புதிய தமிழகம், நாம் தமிழர் கட்சி, புதிய நீதிக்கட்சி ஆகிய 5 கட்சிகள் பங்கேற்கவில்லை. கூட்டத்தில், தென்மாநிலங்களை சேர்ந்த எம்.பி.க்களை கொண்டு கூட்டு நடவடிக்கைக்குழு அமைப்பது என ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாநில நலனில் அக்கறை கொண்டு எதிர்க்கட்சிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்று, தீர்மானத்திற்கு ஆதரவு அளித்தது, தங்களின் கருத்துக்களை பகிர்ந்து கொண்டது வரவேற்கத்தக்க அம்சமாகும்.

கூட்டத்தில் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், எம்பி தொகுதி 848 ஆக உயர்த்தப்பட்டு, தற்போதைய விகிதாச்சாரத்தின்படி தொகுதியை மறுசீரமைப்பு செய்தால் தமிழகத்திற்கு கூடுதலாக 22 எம்.பி. தொகுதிகள் வரை கிடைக்கும். அதேநேரம் மக்கள் தொகையின் படி மறுசீரமைப்பு செய்தால், எம்.பி. தொகுதிகள் 39ல் இருந்து 31 ஆக குறையும். மக்கள் தொகை கூடிய வடமாநிலங்களில் எம்.பி. தொகுதிகள் அதிகரிக்கும். இது கல்வியறிவை உயர்த்தி,



தினகரன்

மார்ச் 6, 2025 வியாழக்கிழமை

கூட்டு முயற்சி

மக்கள் தொகை பெருக்கத்தை கட்டுப்படுத்திய தமிழகம் உட்பட தென்மாநிலங்களுக்கு, ஒன்றிய பா.ஜ. அரசு தரும் தண்டனையாக பார்க்கப்படுகிறது.

இதை மனதில் கொண்டே அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி முதல்வர் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளார். இந்த தீர்மானம் ஒன்றிய அரசின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படும். மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, எம்.பி.க்கள் தொகுதிகளை மறுசீரமைப்பு செய்வதில் தவறில்லை. ஏற்கனவே, கடந்த 2002ம் ஆண்டு தொகுதிகள் இந்த முறையில்தான் மறுசீரமைக்கப்பட்டன. ஆனால், எம்.பி.க்கள் தொகுதிகளில் எந்த மாற்றமும் செய்யவில்லை. அதைப்போலவே 2026 மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு பின், விகிதாச்சார அடிப்படையில்தான் தொகுதி மறுசீரமைக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் பழைய நடைமுறையை அடுத்த 30 ஆண்டுகளுக்கு தொடரச் செய்யலாம். அதுதான் சிறந்த தீர்வாகவும் இருக்க முடியும்.

அடுத்தாண்டு தமிழகத்தில் நடக்க உள்ள சட்டமன்ற தேர்தலை கருத்தில்கொண்டு, தமிழகத்தில் ஒரு எம்.பி. தொகுதி கூட குறையாது என ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா மற்றும் பா.ஜ. தமிழக தலைவர்கள் கூறி வருகின்றனர். ஆனாலும், வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது என்பது போல, இது வடமாநிலங்களை வளப்படுத்தி, தென்மாநிலங்களின் வளர்ச்சியை சீர்குலைக்கும் செயல் என்றே அரசியல் கட்சிகள், விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். எனவே, விகிதாச்சார அடிப்படையில் எம்பிக்களின் தொகுதியை நிர்ணயிக்க வேண்டுமென்ற அனைத்து கட்சிக் கூட்ட தீர்மானத்தை ஒன்றிய அரசு ஏற்று, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதே தமிழகம் மற்றும் தென்னிந்திய மக்களின் விருப்பமாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் துணைத்தலைவரும், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் பொதுக்குழு உறுப்பினருமான கவிஞர் நந்தலாலா அவர்கள் உடல்நலக்குறைவால் மறைவுற்ற நிலையில், திருச்சி கருமண்டபத்தில் உள்ள அவரது இல்லத்துக்குச் சென்று நந்தலாலாவின் திருவுடலுக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் வைரமணி, மேயர் மு.அன்பழகன், எம்.பிரபாகரன், வீ.ஜெகதீசன், என்.இராஜேந்திரன், பரமேஸ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–7 க்கு உட்பட்ட திருவாரூர் மாவட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 07.03.2025 வெள்ளிக்கிழமை | காலை 9.00 மணி | திருவாரூர் | மலர் மஹால், வடசேரி சாலை, மன்னார்குடி. |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 04-03-2025




# மொழிப்போரில் களம் பல கண்ட பேராசிரியர்

**1977** முதல் தொடர்ச்சியாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளராக தொண்டாற்றிய இனமானப் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் தனது 98வது வயதில் உடல்நலக் குறைவால் 7 மார்ச் 2020-ல் மறைவெய்தினார்.

மறைந்த அப்பெருமகனாரை நினைவு கூருவோம். அவர் ஊட்டிய இன உணர்வை, மொழிப்பற்றை / கழகப் பற்றை, கொள்கைப் பற்றை கழகத்தவர் தம் நெஞ்சில் ஏந்தி அவர் காட்டிய பாதையில் எந்நாளும் நடப்பதற்கு உறுதியேற்போம்.

இனமானப் பேராசிரியர் அவர்கள் திருவாரூர் மாவட்டத்திலுள்ள காட்டூர் கிராமத்தில், எம்.கல்யாணசுந்தரனார் மற்றும் சொர்ணம்பாள் தம்பதியருக்கு டிசம்பர் 19 ஆம் தேதி, 1922 ஆம் ஆண்டு பிறந்தார். பேராசிரியரின் தந்தை திரு. கல்யாணசுந்தரனார் திராவிட இயக்கக் கொள்கைகளில் பற்றுக் கொண்டவர். தனித்தமிழில் தனது பெயரை மணவழகர் என்று மாற்றிக் கொண்டார்.

**தந்தையாரின் இயக்கப் பற்று:**

திரு.மணவழகனார் தனித்தமிழ் இயக்கத்தின் மீது கொண்ட ஈடுபாட்டால் பேராசிரியரது இயற்பெயரான ராமையாவை அன்பழகன் என மாற்றினார். தனக்கு பிறந்த ஐந்து ஆண் பிள்ளைகளுக்கும் ஒரே மகளுக்கும் தனித்தமிழில் பெயரிட்டார். தனது பிள்ளைகளுக்கு படிப்பறிவு தான் உயர்வு தரும் என்பதை உணர்ந்தவர். அவரது பிள்ளைகளும் அவரது எண்ணம் போல் சிறந்த முறையில் கல்வி கற்று தேர்ந்தனர்.

திரு.மணவழகனார் சிதம்பரம் வட்டாரத்தில் நீதிக்கட்சிக்கு ஆதரவை திரட்டியவர், பின்னர் தந்தை பெரியார் தொடங்கிய சுயமரியாதை இயக்கத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார், இதன் விளைவாக தந்தை பெரியாரின் நன்மதிப்பையும், அன்பையும் பெற்றார்.

**இனமானப் பேராசிரியரின் இளமை பருவம்:**

இனமானப் பேராசிரியர் தனது சிறுவயது முதல் தனது தந்தையாரின் திராவிட இயக்க கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு அதனை கேட்டு அறிந்து வளர்ந்ததால் பேராசிரியரது கொள்கைப்பற்றும், மொழிப்பற்றும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பி.ஏ ஆனர்ஸ் வகுப்பில் பயின்ற பேராசிரியர், அந்நாட்களிலேயே சிறந்த நாவன்மை மிக்கவராக விளங்கினார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை திராவிட இயக்கத்தின் நாற்றுப் பண்ணையாக மாற்றியவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திராவிட இயக்க மாணவர் பேரவையை நிறுவியவர். இந்த நிலத்திலிருந்து பண்பட்டு பொது வாழ்க்கையில் தங்களை ஈடுபடுத்தி கொள்கை மனம் வீசியவர்கள் பலர். அத்தகையோர் திராவிடர் கழகத்திலும், பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத்திலும் முன்னணி தலைவர்களாக உருவாயினர்.

பேராசிரியரது அரசியல் வாழ்வில், சட்டமன்ற உறுப்பினராக 8 முறையும், ஒரு முறை தமிழக மேல் சபை உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராக ஒரு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பான முறையில் மக்கட் தொண்டாற்றி உள்ளார்.

இவரை பேரறிஞர் அண்ணா “பேராசிரியர் தம்பி” என அழைத்தார், ‘எனக்கு அக்காள் உண்டு. அண்ணன் இல்லை. பேராசிரியர்தான் என் அண்ணன்’ என்றார் கலைஞர்.

**இனமானப் பேராசிரியரின் மொழிப் போராட்டங்கள்:**

24 பிப்ரவரி 1961 சட்டமன்றத்தில் ‘தமிழ்நாடு’ பெயர் மாற்றத் தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேராசிரியர் உரையாற்றினார். அவ் நீண்ட உரையின் சில பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன :

Sri. K. Anbazhagan: இந்தத் தீர்மானத்தின் மீது இந்தத் தமிழ்நாடு சட்டமன்றத்திலேயே நான் பேச நேரிட்டதற்கு நான் உண்மையாகவே வெட்கப்படுகிறேன். “ தமிழ்நாடு “ என்று பெயர் வைத்தால் என்ன லாபம் என்று ஒரு அமைச்சர் கேட்கிறார். நான் சொல்கிறேன், “ நான் தமிழன் “ என்று சொல்லிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லாத அளவுக்கு அந்தப் பெயர் நம்மை காப்பாற்றும். தமிழ்நாடு என்று பெயர் வைப்பதற்கு இவ்வளவு மறுப்புச் சொல்லுகிறவர்கள், தமிழ்நாடு என்று பெயர் வைப்பது நம்முடைய பிறப்பு உரிமை என்று நான் சொல்லுகிறேன். தமிழ்நாட்டில் தமிழன் மூச்சோடு வாழ்கிற வரையில் தமிழ்நாட்டில் தமிழ்இனம் இருக்கிற வரையில், “ தமிழர் என்று ஓர் இனம் உண்டு, தனியே அவருக்கொரு குணம் உண்டு என்று நாமக்கல் கவிஞர் பெருமையாகப் பாடியிருக்கின்ற மக்கள் உள்ள வரையில் அவர்கட்கு அடையாளமாக தமிழ்நாடு என்ற பெயர் தாருங்கள் என்று கேட்கிறேன் என்று நீண்ட நேரம் பேசி பெயர் மாற்றத்திற்கான தேவையை இலக்கியத்திலிருந்தும், நாட்டில் நிலவும் நிலைமைகளிலிருந்தும் எடுத்துக் காட்டி பெயர் மாற்றத்திற்கான நியாயங்களை பதிவிட்டுள்ளார்.

21 மார்ச் 1967-ல் மற்றும் 4 ஏப்ரல் 1967ஆம் தேதி நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பங்கேற்ற பேராசிரியர் மொழிப் பிரச்சினையையும், மாநிலத்தின் உரிமைகளை வலியுறுத்தியும் பின்வருமாறு ஆங்கிலத்தில் உரையாற்றினார்;

Shri Anbazhagan:

Sir, I beg to move, that at the end of the motion, the following be added, namely” but regret that in the address no mention has been made of the failure of the Government is not taking steps to amend the Constitution of India to implement Pandit Nehru’s assurance to the non Hindi speaking people and not according equal status to all the national languages of the country”

4 April 1967;

Shri Anbazhagan: it is well known that a democratic society is only great and free in so far as greatness and freedom proceed from the individuals who compose it. For this the state legislatures and state governments should be empowered sufficiently to enable them to carry on the administration in the interests of the wellbeing of the people. In order to make the states more effective, the Union Government should minimise their power and the burdens and empower the State Governments to a great extent, so that the aim of this sovereign democratic Republic is achieved ultimately.

I plead with you with an open mind that the leaders of Union government and the nation should think without any bias on the advisability of full autonomy for the States, without infringing upon the unity of the nation and the sovereignty of the country.

நாடாளுமன்றத்தில் அரசாங்க அலுவல் மொழி சட்டத் திருத்தத்திற்கு எதிராக தி.மு.க. உறுப்பினர்கள் இனமானப் பேராசிரியர் தலைமையில் உறுதியுடன் நடத்திய விவாதப் போராட்டம்தான், இந்தி மொழியை ஒரே அலுவல் மொழியாக திணிப்பதற்கு எதிரான அரணாக அமைந்தது, எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருந்தாலும் வலுவான வாதங்களால் இந்திக்கு ஆதரவானவர்களையும் சற்று சிந்திக்க வைத்தனர்.



இனமானப் பேராசிரியரின் தலைமையில் நடத்தப்பட்ட நாடாளுமன்ற விவாதங்களும், தி.மு.க. உறுப்பினர்கள் கொண்டு வந்த வெட்டுத் தீர்மானத்தை பற்றிய செய்திகள் நாடாளுமன்ற விவாதக் குறிப்புகளில் இடம் பெற்றுள்ளது,

இந்தி பேசாத பகுதிகளின் ஆதரவை பெறும் வரையில் ஆங்கிலமும் இந்திக்கு இணையாக அலுவல் மொழியாக இருக்கும் என்ற பண்டிதர் நேருவின் உறுதிமொழியை அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெற அரசமைப்பு சட்டத்தினை திருத்தக் கோரி சுமார் 30 மணி நேரம் நாடாளுமன்றத்தில் விவாதித்தனர்.

மேலும் குடியரசுத் தலைவருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசும் பொழுது மாநில சுயாட்சியின் அவசியத்தைப் பற்றி வலியுறுத்தி அதன் நியாங்களையும், தேவைகளையும் விரிவாக எடுத்துரைத்தார்.

தற்சமயம் நமது மாநிலத்திற்கு எதுவும் கிடைத்து விடக்கூடாது, எதுவும் தந்துவிடக்கூடாது என்று மாற்றாந்தாய் எண்ணத்துடன் ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் உள்ளது. மாநில உரிமைகளை பறித்தல் மற்றும் மும்மொழிக் கொள்கையை அமல்படுத்துவது போன்ற கூட்டாட்சி தத்துவத்தைச் சிதைக்கும் செயல்களில் ஒன்றிய அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. அதனை உறுதியுடன் எதிர்த்து போர்க்கொடி உயர்த்தியுள்ளார் நம் தலைவர் தளபதியார். இவ்வகை ஆபத்துக்களை தடுக்க ஐம்பது ஆண்டுகள் முன்னரே கழகத்தின் வலுவான எதிர்ப்பை நாடாளுமன்றத்தில் பதிவு செய்தவர் இனமானப் பேராசிரியர்.

**மொழிப் போராட்டத்தின் காரணமாக சட்டமன்ற உறுப்பினர் பதவிப்பறிப்பு:**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழு, 1986 நவம்பர் 9 ஆம் தேதி கோயம்புத்தூரில் நடைபெற்ற கூட்டத்தில், இந்திய அரசியலமைப்பின் XVII ஆம் பாகத்தின் ஒரு பகுதியை, 1986 நவம்பர் 17 ஆம் தேதி தொடங்கி டிசம்பர் 17 ஆம் தேதி வரை மாநிலத்தின் பல்வேறு இடங்களில் நடைபெறும் பொதுக் கூட்டங்களில் எரிக்க வேண்டும் என்று அறிவித்தது.

அதன்படி அப்போராட்டத்தினை நடத்தியதற்காக அ.தி.மு.க. நிறுவனர் அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர், வானளாவிய அதிகாரம் கொண்ட சபாநாயகர் பி.எச். பாண்டியன் ஆகிய இருவரும் இணைந்து இனமானப் பேராசிரியர் உள்ளிட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சேர்ந்த பின்வரும் 10 சட்டமன்ற உறுப்பினர்களை பதவியிழக்க செய்தனர். அந்த 10 உறுப்பினர்கள் பெயர்கள் பின்வருமாறு. க. அன்பழகன்,எஸ்.பாலன், அ.செல்வராசன், பி.பொன்னுரங்கம், பரிதி இளம்வழுதி, எம்.ராமநாதன், ஆர்.சின்னசாமி, எம்.அப்ரகாம், சி.ஆறுமுகம், வி.கே.ராஜு என்ற அந்த அவையின் 10 உறுப்பினர்களை மேற்கூறிய நடத்தை காரணமாக இந்த அவையின் உறுப்பினர்களாக இருக்கத் தகுதியற்றவர்கள் என்று இந்த அவை கருதுகிறது என்று கூறி சட்டமன்ற உறுப்பினர்களை தகுதி இழக்கச் செய்தனர்.

இந்த தீர்மானத்தை அவையில் முன்மொழிந்தவர், பேரறிஞர் அண்ணாவால் தம்பி வா தலைமையேற்க வா என்றழைக்கப்பட்ட நடமாடும் பலகலைக்கழகம் என்று பெயர் பெற்ற அவையின் முன்னவர் நாவலர் நெடுஞ்செழியன்தான். நம் கண்ணை நம் கையாலே குத்தியவர் எம்.ஜி.ஆர்.

10.8.1983இல் முத்தமிழறிஞர் கலைஞரும், இனமானப் பேராசிரியர் க.அன்பழகனும் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக சட்டப்பேரவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தனர்.

தமிழ்களின் மொழி உரிமை மற்றும் இன உரிமை பாதுகாக்கப்பட இரு முறை பதவியிழந்தவர் இனமானப் பேராசிரியர் அவர்கள்.

திராவிட இயக்கத்தின் கொள்கைகள் வெற்றி பெற நீதிக்கட்சியின் மூலவர்களான சர்.பிட்டி. தியாகராஜன், டாக்டர் சி.நடேசனார் மற்றும் டி.எம்.நாயர், திராவிடர் இயக்கம் கண்ட தந்தை பெரியார், தி.மு.க.வை நிறுவிய பேரறிஞர் அண்ணா, கழகத்திற்கு வலுவூட்டிய முத்தமிழறிஞர் கலைஞர் அவருடன் தோளோடு தோள் நின்று தொண்டாற்றிய இனமானப் பேராசிரியர் போன்ற இயக்க முன்னோடிகள் பெற்ற வெற்றியினால் தமிழர்கள் அகிலெமெங்கும் பரவி தலைநிமிர்ந்து நிற்பது வடவர்களின் கண்ணை உறுத்துகிறது, அதனால் சங்பரிவார் அமைப்புகள் இந்த பாய்ச்சலைத் தடுத்து நிறுத்த பலவகைகளிலும் சதிச் செயல்கள் புரிகின்றனர், இதனையெல்லாம் முறியடிக்க தமிழர்களின் அரணாக திகழ்கிறார் இனமானப் பேராசிரியர் அவர்களால் எதிர்காலத்தில் திராவிட இயக்கத்தை தங்குத் தடையின்றி நடத்திச் செல்ல தகுதியானவர் என்று அடையாளப் படுத்தப்பட்ட தளபதி தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்க தகுதியானவர் என்று பேராசிரியர் அடையாளம் கண்ட அகவை 72 காணும் தலைவர் தளபதி அவர்கள் திராவிட இயக்க முன்னோடிகளின் மொத்த உருவமாகத் திகழ்கிறார்.

கழக முன்னோடிகளான பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகிய யாவரும் வகுத்து தந்த பாதையில் தீர்க்கமாகவும், விவேகமாகவும், கொள்கைகளில் சிறிதும் சமரசத்துக்கு இடங்கொடாமல், உறுதியாக செயல்பட்டு தமிழர்களை, தமிழ் மொழியை, தமிழ்நாட்டை அடுத்த கட்டத்திற்கு இட்டுச் செல்கிறார் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

சமீபத்தில் தனது பிறந்த நாளை கொண்டாடிய தலைவர் தளபதியார் அவ்விழாவில் ஓர் உறுதிமொழியை ஏற்றார், தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசினால் ஏற்படும் அநீதிகளிலிருந்து தமிழ்நாட்டை காக்க ‘தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!’ என்று சபதமேற்றுள்ளார்.

தலைவர் தளபதியாரோடு இணைந்து திராவிட இயக்கத்தை காக்க கழகத்தவர்களும், தமிழர்களும் வீறு கொண்டு எழ வேண்டும். அவ்வாறு எழுச்சியுற்ற, இன உணர்வோடு தமிழர்கள் திகழ வேண்டும் என்பதே பேராசிரியரின் அவா. அவரது நினைவு நாளில் கழகத்தவர் அவர் வகுத்த தந்த பாதையில் அனைவரும் பயணிக்க உறுதியேற்போம்.



சி.சேரன்
தலைமைச் செயற்குழு உறுப்பினர்
செயலர் – பேராசிரியர் நற்றமிழ்த் தொண்டகம்